செ.வெ.எண்.10 நாள்: 04.09.2019

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் இந்தியன் வங்கியின் புதிய கிளை மற்றும் ஏடிஎம் மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்

---

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் இந்தியன் வங்கியின் புதிய கிளை மற்றும் ஏடிஎம் மையம் திறப்பு விழா இன்று (04.09.2019) நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் கலந்துகொண்டு இந்தியன் வங்கியின் புதிய கிளை மற்றும் ஏடிஎம் மையத்தினை திறந்து வைத்து குத்துவிளக்கு ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

இந்திய அளவில் இந்தியன் வங்கி 2935 கிளைகளை கொண்டு செயல்படுகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் உடன்குடி கிளையுடன் சேர்த்து 12 கிளைகளை கொண்டுள்ள மக்களின் நம்பிக்கையை பெற்ற சிறந்த வங்கியாக செயல்படுகிறது. அரசின் திட்டங்கள் செயல்படுத்துவதில் வங்கிகளுக்கு பங்குண்டு. வங்கிகளின் ஒத்துழைப்புடன் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் பல்வேறு விவசாயிகள், சிறு குறு தொழிலாளர்கள் பல்வேறு விதமான தொழில்களை செய்து வருகிறார்கள். அரசு வழங்கும் மானியம் , கடனுதவிகள் பெற பொதுமக்கள் தங்களை நாடி வரும்போது அவர்களின் விண்ணப்பங்களை எந்தவித காரணங்களும் இல்லாமல் நிறுத்தி வைப்பதோ, நிராகரிப்பதோ செய்வது தவிர்க்க வேண்டும். சிறு பிழைகள் இருந்தால் அதனை எடுத்துக்கூறி அவர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் பெற உதவி செய்ய வேண்டும். குறிப்பாக மகளிர் திட்டம், தாட்கோ விவசாயிகள் பயன்பெறும் வகையில் பிரதம மந்திரி கிசான் திட்டம், வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் சுயதொழில் துவங்க கடனுதவிகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் வங்கிகளின் வாயிலாகத்தான் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் தங்களது சேவைகளை செய்ய வேண்டும். அரசின் கடன் உதவிகள் தகுதியான நபர்களுக்கு சென்றடையும் வகையில் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில் திருச்செந்தூர் கோட்டாட்சியர் செல்வி.தனப்ரியா, திருச்செந்தூர் வட்டாட்சியர் திருமதி.ராஜலட்சுமி, இந்தியன் வங்கி திருநெல்வேலி மண்டல மேலாளர் திரு.கோபிகிருஷ்ணன், உதவி பொது மேலாளர் திரு.செந்தில்வேல், உடன்குடி கிளை மேலாளர் திருமதி.சாந்தினி மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.